தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு
குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000
SPECIAL OFFER

ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B, மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004


# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
PRGI NO: TNTAM/25/A1018


SN ஆட்டோ கன்சல்டிங்
டுவீலர் விற்க வாங்க...
பைனான்ஸ் வசதி உண்டு
317, ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
G.சுதாகர் - 99656 02104

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com


VOLUME : 01 | ISSUE: 239 | 21.2.2026 | SATURDAY | MAASI : 8 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 239 | 21.2.2026 | சனிக்கிழமை | மாசி : 8 | விலை : ரூ.5/-

## சுயமரியாதை சீண்டப்பட்டால்

# "முதல் குரல் எழுப்புவேன்"

## மாற்றுத் திறனாளிகள் போராட்டத்தில் காவல்துறை தாக்குதல் நடத்தவில்லை: அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்



சென்னை, பிப்.20-

'மாற்றுத் திறனாளிகள் போராட்டத்தின்போது காவல் துறை தாக்குதல் நடத்தவில்லை' என்று அமைச்சர் எ.வ.வேலு விளக்கம் அளித்தார். தமிழக சட்டப்பேரவையில் இடைக்கால பட்ஜெட் மீதான நேற்றைய விவாதத்தில் மார்க்சிஸ்ட் உறுப்பினர் எம்.சின்னதுரை பேசும்போது, "மாற்றுத் திறனாளிகள் மாதாந்திர உதவித் தொகையை ரூ.1,500ல் இருந்து ரூ.6 ஆயிரமாக உயர்த்த வேண்டுமென அரசிடம் கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

இதை வலியுறுத்தி அவர்கள் போராட்டம் நடத்தியபோது காவல் துறை மேற்கொண்ட நடவடிக்கை கண்டிக்கத் தக்கது. குறிப்பாக இந்த அமைப்பின் பொதுச் செயலாளர் பா.ஜான்சிராணியை காவல்துறை நடத்திய விதம் ஏற்புடையதல்ல. மேலும், மாற்றுத் திறனாளிகள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும்" என்றார்.

இதற்குப் பதிலளித்து அமைச்சர் எ.வ.வேலு பேசும்போது, "மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கைகளை திமுகதான் கனிவோடு பரிசீலித்து நிறைவேற்றித் தருகிறது. சென்னையில் மாற்றுத் திறனாளிகள் சங்கத்தினர் போராட்டம் நடத்திய போது போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது.

இத்தகைய சந்தர்ப்பங்களில் காவல்துறை அந்த இடத்தில் இருந்து போராட்டக் குழுவை அப்புறப்படுத்தும்போது சில சம்பவங்கள் நடப்பது தவிர்க்க முடியாதது. ஜான்சிராணி மீது காவல்துறை தாக்குதல் நடத்தவில்லை.

அவரே தவறி விழுந்து விட்டார். உடனே அவரை மருத்துவமனைக்கு கொண்டுவந்து சிகிச்சை அளித்தது காவல்துறையினர் தான். இதில் வேறு எந்த உள்நோக்கமும் இல்லை. மேலும், இந்தப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முதல்வர் அறிவுறுத்தியதன் பேரில் அமைச்சர் கீதா ஜீவன், சங்கத் தலைவர்களை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் முதல் பணியாக மாற்றுத் திறனாளிகள் கோரிக்கை நிறைவேற்றப்படும் எனக் கூறி போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது" என்றார்.

## சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை: பிப்.21-

''சுயமரியாதை சீண்டப்பட்டால் முதல் குரல் எழுப்புவேன்'' என சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் பேசுகையில் தெரிவித்தார்.

சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: கடந்த 5 ஆண்டுகளில் 5 நிதிநிலை அறிக்கைகள் அளிக்கப்பட்டு, இவ்வாண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை, வேளாண் இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியை அடுத்த 2 மாதங்களில் மீண்டும் வந்து இன்னும் கூடுதலாக, வேகமாக வந்து பணியை தொடர்வோம் என்ற நம்பிக்கை தமிழக மக்களை போலவே எனக்கும் இருக்கிறது. எனக்கு தரப்பட்ட பொறுப்பை மிக சிறப்பாக செய்ததாக நான் நினைக்கிறேன்.

பொறுமை, நிதானம்

வரலாறு சிறப்புமிக்க இந்த இருக்கையில் எனக்கு முன் இருந்த பலரும் இன்று இல்லாவிட்டாலும் அவர்கள் அனைவரும் போற்றப்படக் கூடியவர்கள் தான். ஆட்சி சக்கரத்தை உயர்த்தி பிடிப்பது மகத்தானது. பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை, எதையும் தாங்கும் வல்லமை, கடமை தவறாமை ஆகிய பண்புகளை நானும் கடைபிடித் திருக்கிறேன்.



மக்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பக்கையே நாளைய ஆட்சியாளர்களாக எங்களை தொடர செய்யப்போகிறது. 5 ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தால் இந்த முதல்வர் ஸ்டாலின் இன்னும் வலிமை பெற்று தமிழகத்தை இன்னும் ஏற்ற பெற வைப்பேன்.

மக்களுக்கு நன்றி

நம்பிக்கையோடு இன்னும் உழைக்க வேண்டும் எனும் ஊக்கத்தை நான் பெற்றுள்ளேன். எதனையும் எதிர்கொள்ளும் வல்லமை பெற்றுள்ளேன். 234 தொகுதிகளையும் என்னுடைய தொகுதிகளாக நினைத்து, எங்களுக்கு ஓட்டளித்தவர்கள், ஓட்டளிக்காதவர்கள் என்று பிரித்து பார்க்காமல் செயல் ஆற்றியுள்ளேன். மிகப்பெரிய வாய்ப்பு தந்த தமிழக மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னை தேர்ந்தெடுத்து அனுப்பிய கொளத்தூர் தொகுதி மக்களுக்கும் நன்றி.

தமிழக கவர்னருடன் எனக்கு எந்த தனிப்பட்ட கருத்து வேறுபாடு கிடையாது. சுயமரியாதை சீண்டப்பட்டால் முதல் ஆளாக குரல் கொடுப்பேன். தமிழக பண்பாட்டை மனதில் கொண்டு தமிழக கவர்னருக்கு எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் சாதனைகளுக்கு தோளோடு தோள் நின்ற தோழமை கட்சிகளுக்கும், துணை முதல்வர் உதயநிதி, சபாநாயகர், அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இபிஎஸ்க்கு நன்றி

குறைகளை சொல்பவர்கள் நம் முன்னேற்றத்திற்கு சிறகுகளை தரக்கூடியவர்கள். அரசுக்கு தக்க யோசனைகள் கூறுவதிலும், குறைகளை சுட்டிக்காட்டுவதிலும் கண்ணியமான முறையை கடைபிடித்து ஒத்துழைப்பு நல்கிய, எதிர்க்கட்சி தலைவர் இன்றைக்கு வரவில்லை. அவருக்கும், மற்றக்கட்சி தலைவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் உழைக்க தயாராக இருக்கிறேன். எங்கள் சாதனையை நாங்களே முறியடிப்போம் என்ற நிலையில் மீண்டும் ஆட்சி அமைப்போம். மீண்டும் வெல்வோம். ஆட்சிக்கு வந்து தமிழக நல திட்டங்களை தொடர்வோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

மீண்டும் திமுக ஆட்சி!

சென்னை சட்டசபை வளாகத்தில் நிருபர்களிடம் முதல்வர் ஸ்டாலின் கூறியதாவது: மன நிறைவோடு 5 வருடம் ஆட்சியில் இருந்து தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நாங்கள் முழுமையாக நிறைவேற்றி இருக்கிறோம். முழு மனநிறைவு அடைந்துள்ளேன். மீண்டும் திமுக தலைமையில் தான் ஆட்சி அமையும். அது உறுதி. விரைவில் சந்திப்போம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

## "மீண்டும் திமுக ஆட்சிக்கு வாய்ப்பு!" முதல்வர் ஸ்டாலினை சந்தித்த ஓபிஎஸ் கருத்து

சென்னை: பிப்.21-

"மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு திமுகவுக்கு இருக்கிறது" என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தின் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் இன்று தமிழக சட்டப்பேரவை வளாகத்தில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்துப் பேசியது அரசியல் வட்டாரத்தில் பல்வேறு சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

இந்தச் சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் ஓ.பன்னீர்செல்வம் கூறும்போது, "ஐந்தாண்டு கால திமுக ஆட்சி சிறப்பாக நிறைவு பெற்றிருக்கிறது. அதனால் முதல்வரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

அப்போது உசிலம்பட்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஐயப்பன், முதல்வர் ஸ்டாலினுக்கு ஆதரவாக சட்டப்பேரவையில் பேசியது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், "தமிழக மக்கள் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறார்களோ, அதை அவர் சொல்லியிருக்கிறார்" என்று கூறினார்.

பின்னர் அவர், "அது பொதுவான கருத்து, இன்றைக்கு இருக்கும் அரசியல் சூழ்நிலை, கடந்த 5 ஆண்டு கால ஆட்சியின் நிலை, திமுக செய்த சாதனைகள் மக்கள் மனதில் ஆழமாக பதிந்திருக்கிறது. மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு திமுகவுக்கு இருக்கிறது. தமிழகத்துக்கே வழி பிறந்திருக்கிறது" என்றும் ஓபிஎஸ் கூறினார்.



■ சென்னை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு அரசு தலைமையில், 2024ரு2025ஆம் ஆண்டிற்கான முதல்வரின் மாநில விளையாட்டு விருது 'சிறந்த விளையாட்டு அமைப்பாளர்' பிரிவில் தமிழ்நாடு சைக்கிள் சங்கத்க்கு வழங்கப்பட்டது. இந்த விருதை தமிழ்நாடு துணை முதல்வர் . உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு சைக்கிள் சங்கத்தின் தலைவர் எம். சுதாகர் அவர்களுக்கு வழங்கினார். மேலும், யி. மேகாநாத ரெட்டி , ஐ.ஏ.எஸ்., தலைமை நிர்வாக அதிகாரி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், நிகழ்ச்சியில் உடனிருந்தார்.

## "ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான அமைச்சர் கே.என்.நேருவை பதவி நீக்கம் செய்ய வேண்டும்" விஜய்

சென்னை: பிப்.21-

''திமுக அரசு, ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி உள்ள நகராட்சித் துறை அமைச்சரைத் தானாகவே ராஜினாமா செய்யச் சொல்ல வேண்டும். இல்லையேல் அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்'' என தவெக தலைவர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "கபட நாடகத் திமுக அரசின் நகராட்சித் துறை அமைச்சரின் ரூ.1020 கோடி ஊழலை அமலாக்கத் துறை எப்போதோ வெளிக்கொண்டு வந்தது. அப்போதே சம்பந்தப்பட்ட அமைச்சர் மீது வழக்கு தொடுக்கவும் சொன்னது. ஆனால், ஊழலின் ஊற்றுக்கண்ணை விசாலப்படுத்திக்கொண்டே செல்வதில் இந்த வெற்று விளம்பர மாடல் திமுக அரசு கைதேர்ந்தது. ஆகவே, அமலாக்கத் துறை தந்த ஊழலுக்கான ஆதாரங்களைக் கண்டுகொள்ளவே இல்லை.

2026 தேர்தலில் வெல்லவே முடியாது என்று தெரிந்தும் தேர்தலுக்காக ஏதாவது தில்லுமுல்லுகளையும் கூட்டணிக்காகத் தகிடுதத்தங்களையும் தாராளமாகவும் ஏராளமாகவும் செய்வதில் மட்டுமே முனைப்பாக இருக்கும் திமுக அரசின் உச்சியைப் பிடித்து உயர்நீதிமன்றம் உலுக்கியுள்ளது. நகராட்சித் துறை அமைச்சரின் ஊழல் குறித்து அமலாக்கத் துறையின் குற்றச்சாட்டுகளுக்காகத் தந்துள்ள ஆதாரங்களில் முகாந்திரம் உள்ளது. எனவே, உடனடியாக அவர் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும் எனத் தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.



ஊழல் மலிந்த மு.க.ஸ்டாலின் அரசுக்கு நேர்ந்து வரும் துடைக்கவே முடியாத ஆகப் பெரிய அவமானங்களில் இதுவும் ஒன்று. இதுவரை தனது அரசின் ஊழல்களுக்குப் பரிகாரமே தேடாத திமுக அரசு, ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி உள்ள நகராட்சித் துறை அமைச்சரைத் தானாகவே ராஜினாமா செய்யச் சொல்ல வேண்டும். இல்லையேல் அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

ஏற்கெனவே டாஸ்மாக்கில் ரூ.1000 கோடி அளவிலான ஊழல். இப்போது நகராட்சித் துறையில் 1020 கோடி ஊழல். அமலாக்கத் துறை அவிழ்த்துவிடும் திமுக அரசின் ஊழல்கள் எல்லாமே ஆயிரக்கணக்கான கோடிகளிலேயே உள்ளன. மன்னிக்க முடியாத அளவிற்கு ஊழல் மலிந்த திமுக அரசை, வருகிற தேர்தலில் தூக்கி எறிந்து விசிலடித்துக் கொண்டாட மக்கள் காத்திருக்கின்றனர்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தவெக கொள்கைப் பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் தனது எக்ஸ் பக்கத்தில் "திமுக அமைச்சர் கே.என்.நேரு மீதான 1,020 கோடி ரூபாய் ஊழல் புகார் குறித்து, உடனடியாக வழக்குப் பதிவு செய்ய தமிழக லஞ்ச ஒழிப்புத் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் சாட்டையடி உத்தரவு பிறப்பித்திருப்பது, ஊழல் ஒழிப்பு நடவடிக்கையில் பெரும் நம்பிக்கையைத் தருகிறது.

ஆதாரங்கள் கையில் இருந்தும் கூட, எந்தத் தவறுமே செய்யாதது போல முதல்வர் ஸ்டாலின் நடித்துக் கொண்டிருந்தார். இனி திமுகவின் ஊழல் அமைச்சர்கள் யாரும் நீதியின் முன் தப்பிக்க முடியாது! "ஊழல் எஜமான்கள் நிறைந்த கட்சி திமுக" என்பது மீண்டும் ஒருமுறை ஊர்ஜிதமாகியுள்ளது.

இந்த வெற்று விளம்பர 'மாடல்' திமுக ஆட்சி வீட்டுக்கு அனுப்பப்படுவதற்கும், ஊழல் திமுக அமைச்சர்கள் அனைவரும் சிறைக்குச் செல்வதற்கும் காலம் கனிந்துவிட்டது முதல்வர் அவர்களே!" என்று பதிவிட்டுள்ளார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## புதுச்சேரி என்டிஏ கூட்டணியில் தற்சமயம் அதிமுக இல்லை: பாஜக மேலிட பொறுப்பாளர் தகவல்



புதுச்சேரி, பிப்.21-

'புதுச்சேரி என்டிஏ கூட்டணியில் தற்சமயம் அதிமுக இல்லை. தமிழகத்தில்தான் உள்ளது' என்று பாஜக மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா தெரிவித்தார்.


புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனை, பாஜக மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா, அமைச்சர் நமச்சிவாயம், பேரவைத் தலைவர் செல்வம், மாநிலத் தலைவர் ராமலிங்கம் உள்ளிட்டோர் இன்று மதியம் சந்தித்து பேசினர்.

பிரதமர் வருகை தொடர்பாக பேசிய பிறகு செய்தியாளர்களிடம் நிர்மல் குமார் சுரானா கூறியது: "புதுச்சேரிக்கு வரும் மார்ச் 1ம் தேதி மதியம் பிரதமர் மோடி வருகிறார். அரசு முறை பயணமாக புதுவை வரும் அவருக்கு பாஜக சார்பில் பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்படுகிறது.

கடந்த 14ம் தேதி காரைக்காலுக்கு வந்த மத்திய அமைச்சர் அமித் ஷாவை முதல்வர் ரங்கசாமி சந்தித்தார். அப்போது என்.ஆர். காங்கிரஸ் பாஜக கூட்டணி உறுதியானது. தற்சமயம் புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ், பாஜக கட்சிகள் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ளன. வேறு கட்சிகளுடன் பேசி வருகிறோம். கூட்டணி தொகுதிகள் பிறகு முடிவு எடுக்கப்படும்.

தமிழகத்தில்தான் என்டிஏ கூட்டணியில் அதிமுக உள்ளது. புதுச்சேரியில் தற்சமயம் அதிமுக இல்லை. புதுச்சேரி என்டிஏ கூட்டணியில் அதிமுக, லஜக உள்ளிட்ட கட்சிகளிடம் பேசிக் கொண்டிருக்கிறோம். என்.ஆர்.காங்கிரஸ் புதுச்சேரியில் என்டிஏ உடனும், தமிழகத்தில் தவெகவுடன் செல்வதாக வரும் தகவல் வெறும் வதந்திதான். அதுபோல் முதல்வர் ரங்கசாமி ஏதும் சொல்லவில்லை. முதல்வரை அண்மையில் சந்தித்து பிரதமர் புதுச்சேரி வருகை பற்றி பேசினேன்" என்று அவர் தெரிவித்தார்.

## பணி நியமனங்களுக்கு லஞ்சம் பெற்ற விவகாரம்: அமைச்சர் நேரு மீது வழக்குப்பதிவு செய்ய நீதிமன்றம் உத்தரவு



சென்னை, பிப்.21-

நகராட்சி நிர்வாக துறை நியமன முறைகேடு, டெண்டர் முறைகேடு தொடர்பாக அமலாக்கத் துறை வழங்கிய ஆதாரங்களின் அடிப்படையில் அமைச்சர் கே.என். நேரு உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக நகராட்சி நிர்வாகத்துறையில் பணி நியமனங்களுக்கு லஞ்சம் பெற்ற விவகாரம் தொடர்பாகவும், டெண்டர் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடுகள் தொடர்பாகவும் அமைச்சர் நேரு உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்ய வலியுறுத்தி, அமலாக்கத் துறை சார்பில் தமிழக டிஜிபிக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இந்த கடிதத்தின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட வேண்டும் என அதிமுக எம்.பி. இன்பதுரை மற்றும், ஆதிநாராயணன் ஆகியோர் உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகளை தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு விசாரித்தது. வேறொரு வழக்கு விசாரணையில் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களை டிஜிபிக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், அவற்றின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட வேண்டும் என அமலாக்கத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசுத்தரப்பில், அமலாக்கத் துறையின் கடிதம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, லஞ்ச ஒழிப்புத் துறையினர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், நகராட்சி நிர்வாக துறை நியமன முறைகேடு, டெண்டர் முறைகேடு தொடர்பாக அமலாக்கத் துறை வழங்கிய ஆதாரங்களில் முகாந்திரம் உள்ளது என்பதால், அதன் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்பு துறைக்கு உத்தரவிட்டுள்ளனர். அமலாக்க துறை போதுமான ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளதால் ஆரம்பகட்ட விசாரணை நடத்த தேவையில்லை எனவும், அமலாக்க துறை அளித்த கடிதங்களில் போதுமான ஆதாரங்கள் உள்ளதால் வழக்குப்பதிவு செய்து விசாரித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதிகள், ஆதிநாராயணன் என்பவர் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## "தலைமை சொன்ன வார்த்தைக்காக பொறுமையுடன் கடந்துபோகிறேன்" வைகோவுக்கு மாணிக்கம் தாகூர் பதிலடி





விருதுநகர், பிப்.21-

தலைமை சொன்ன ஒரு வார்த்தைக்காக மரியாதை கொடுத்து பொறுமையுடன் கடந்து போகிறேன் என்று 'கதர் சட்டைகள் கிழிவது வழக்கம்' என்று கூறிய வைகோவுக்கு மாணிக்கம்தாகூர் எம்.பி. பதிலடி கொடுத்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி எம்.பி. மாணிக்கம் தாகூர் பேசும் வார்த்தைகள் கூட்டணியில் நெருடலை ஏற்படுத்துக்கிறது என்றும், காங்கிரஸ் உட்கட்சி மோதலில் கதர் சட்டைகள் கிழிக்கப்பட்டிருக்கும் என்றும், இது ஒன்றும் புதிதல்ல என்றும் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ நேற்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே, மாணிக்கம் தாகூர் எம்.பி. அளித்த பேட்டியில் விருதுநகர் தொகுதியில் இனி போட்டியிட மாட்டேன் என்று கூறினார். இக்கருத்து விருதுநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் சலசலப்பையும் ஏற்படுத்தியது.

இந்நிலையில், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்த கருத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் மாணிக்கம் தாகூர் தனது கருத்தை தனது எக்ஸ் தளத்தில் "கூட்டணி குறித்து பேசக் கூடாது என்று அகில இந்திய காங்கிரஸ் தலைமை சொன்ன ஒத்த வார்த்தைக்கு மரியாதை கொடுத்து இதை தாண்டி பொறுமையுடன் கடந்து போகிறேன். பயந்துக்கிட்டு இல்லை அண்ணன் வைகோ அவர்களே" என்று இன்று பதிவிட்டு, வைகோவுக்கு பதில் அளித்துள்ளார். இருவரது கருத்து மோதல்களும் திமுக கூட்டணிக்குள் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

## ரம்ஜான் நோன்புக்கான மசூதிகள் அறிவிப்பில் உ.பி அரசின் நிலைப்பாடு என்ன?..



புதுடெல்லி, பிப்.21-

ரம்ஜான் மாத நோன்பு நேரத்துக்காக மசூதிகளின் அன்றாட அறிவிப்பின் மீது தனது நிலைப்பாட்டை உத்தரப் பிரதேச அரசு தெளிவுபடுத்தியது. இந்த விவகாரம் குறித்து சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி எம்எல்ஏவான கமல் அக்தர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இது குறித்து உ.பி சட்டப்பேரவையின் பூஜ்ஜிய நேரத்தில் சமாஜ்வாதி கட்சியின் எம்எல்ஏவான கமல் அக்தர் எழுப்பிய கேள்வியில், "ஹோலி, தீபாவளி, தசரா, கன்வார் யாத்திரை மற்றும் கிறிஸ்தவ மற்றும் சீக்கிய கொண்டாட்டங்கள் உட்பட அனைத்து மதங்களின் பண்டிகைகளும் நம் மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது.

இந்த வகையில், ரம்ஜானின் நோன்பு குறித்த நேரங்களை அறிவிக்க மசூதிகளில் இருந்து பாரம்பரியமாக அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. தற்போது, பெரும்பாலான மதத் தலங்களிலிருந்து ஒலிபெருக்கிகளை உ.பி அரசு அகற்றி விட்டது. கடந்த வியாழக்கிழமை தொடங்கிய புனித ரம்ஜான் மாதத்தில் அறிவிப்புகளை வெளியிட மசூதிகள் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுமா?" எனக் கேட்டிருந்தார்.

இதற்கு உ.பி மாநில நிதி மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் சுரேஷ் குமார் கன்னா அளித்த பதிலில், "கடிகாரங்கள் பொதுவாக இல்லாதபோதும், சூரியனின் நிலையைக் கொண்டு மக்கள் நேரத்தை மதிப்பிடும்போதும் மசூதியின் அறிவிப்பு நடைமுறை தோன்றியது.

ஆனால், இன்று ரிக்ஷா ஓட்டுபவர், தெரு விற்பனையாளர் அல்லது காய்கறி விற்பனையாளர் உள்ளிட்ட ஒவ்வொருவரிடமும் நேரத்தைக் காட்டும் மொபைல் போன் உள்ளது. எனவே அந்தத் தேவை இனி இல்லை. ஒலிபெருக்கிகளை பயன்படுத்துவது முழுமையாகத் தடை செய்யப்படவில்லை. ஒலியின் அளவு மட்டுமே உச்ச நீதிமன்றத்தால் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது.

எனவே, ஒலிபெருக்கிகள் தடை என்பது எங்கள் உத்தரவு அல்ல. உச்ச நீதிமன்றம் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவது குறித்த விதிகளை வகுத்துள்ளதே தவிர, அரசு யாருடைய மத நம்பிக்கைகளிலும் தலையிடவில்லை. இரவு 10 மணிக்குப் பிறகு ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் தெளிவாகக் கூறியுள்ளது.

திருமணங்களில் கூட, நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்கு அப்பால் ஒலிபெருக்கிகள் பயன்படுத்துவது குறித்து புகார்கள் வந்தால் காவல் துறை அதை ஒழுங்குபடுத்துகிறது" என்று அமைச்சர் தெரிவித்தார்.

## ஏழைகளுக்கு மலிவு விலையில் டெல்லியில் 25 அடல் கேன்டீன்கள்




புதுடெல்லி, பிப்.21-

ஏழைகளுக்கு மலிவு விலையில் உணவு வழங்கும் நோக்கில் தலைநகர் டெல்லியில் கடந்தாண்டு டிசம்பர் 25ம் தேதி முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பிறந்த நாளில் அடல் கேன்டீன் திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்துக்காக ரூ.104 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. முதல் கட்டமாக 45 அடல் கேன்டீன்கள் திறக்கப்பட்டன. இங்கு ரூ.5 க்கு உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 100 கேன்டீன்கள் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் டெல்லியில் நேற்று 25 அடல் கேன்டீன்கள் திறக்கப்பட்டன. டெல்லி கிருஷ்ணா நகரில் அடல் கேன்டீனை மாநில முதல்வர் ரேகா குப்தா நேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சரும், உள்ளூர் எம்.பி.யுமான ஹர்ஸ் மல்கோத்ரா, டெல்லி நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆசிஷ் சூத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு கேன்டீனிலும் நாள் ஒன்றுக்கு 1,000 உணவுகள் வழங்கப்படும் என்றும், இதன் மூலம் டெல்லியில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலனடைவர் என முதல்வர் ரேகா குப்தா தெரிவித்தார்.

## பணப்பரிமாற்ற வழக்கில் செந்தில் பாலாஜி சகோதரர் மனுவுக்கு பதில் அளிக்க உத்தரவு

சென்னை, பிப்.21-

கடந்த அதிமுக ஆட்சியில் போக்குவரத்துத் துறையில் பணம் பெற்றுக்கொண்டு பணி நியமனங்கள் வழங்கப்பட்டதாக பதியப்பட்ட வழக்கின் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக்குமார் உள்ளிட்டோருக்கு எதிராக சட்டவிரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறை வழக்கு பதிவு செய்துள்ளது.

இந்த வழக்கில், செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக்குமார் உள்ளிட்டோருக்கு எதிராக அமலாக்கத்துறையினர் கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த குற்றப்பத்திரிகையை, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் விசாரணைக்காக கோப்புக்கு எடுத்துள்ளது. தங்கள் தரப்பு வாதத்தை கேட்காமல் கூடுதல் குற்றப்பத்திரிகையை முதன்மை அமர்வு நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துள்ளதால் அதை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரி செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக்குமார், கார்த்திகேயன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி. அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இதுதொடர்பாக அமலாக்கத்துறை பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை மார்ச் 4ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளது



## பாஜக நிர்வாகி அமர்பிரசாத் ரெட்டிக்கு கொலை மிரட்டல்

### போலீஸார் தீவிர விசாரணை

சென்னை, பிப்.21-

வேலூர் மேல்விஷாரத்தை அடுத்த கீழ்விஷாரம் பகுதியில் கடந்த 14ம் தேதி வேலூர் இப்ராஹிம் தலைமையில் பாஜக தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாஜக மாநிலச் செயலாளர் அமர்பிரசாத் ரெட்டி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்தக்கூட்டத்தில் பங்கேற்ற சில நாட்களிலேயே, அவருக்கு அடையாளம் தெரியாத நபர்களிடமிருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழக டிஜிபி அலுவலகத்துக்கு மின்னஞ்சல் மூலம் மிரட்டல் வந்துள்ளது.

அதில், "முஸ்லிம்கள் எப்போதும்பாஜகவுக்கு வாக்களிக்க மாட்டார்கள். நிகழ்ச்சியில் பங்கேற்ற அமர்பிரசாத் ரெட்டி, பிரதமர் மோடியை ஆதரித்துப் பேசினார். எங்கள் சமூகத்துக்கு எதிராக பேச யாரையும் அனுமதிக்க மாட்டோம்.

கணிக்க முடியாத நேரத்தில் அவரது இல்லத்தில் 2 கிலோ ஆர்டிஎக்ஸை வைப்போம். தமிழகத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக பேச அனுமதி அளித்த போலீஸாருக்கு இது ஒரு சவால்.

உங்களால் முடிந்தால், அமர் பிரசாத் ரெட்டியை காப்பாற்ற முயற்சிக்கவும்" என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மிரட்டல் மின்னஞ்சல் தொடர்பாக தீவிரவாத தடுப்பு பிரிவு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து வேலூர் இப்ராஹிமிடம் கேட்டபோது, "மக்களிடையே நாங்கள் கொண்டு செல்லும் கருத்துகளை பொறுத்துக்கொள்ள முடியாத சில சக்திகள், எனக்கும் அமர்பிரசாத் ரெட்டிக்கும் கொலை மிரட்டல் விடுத்துள்ளன. இதுபோன்ற மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சப்போவதில்லை. இந்த மிரட்டல்கள் குறித்து விரைவில் டிஜிபியிடம் புகார் அளிக்க உள்ளோம்" என்றார்.

## மகாராஷ்டிரா விவகாரம் – சமூகநீதி வேடம் போடும் ஸ்டாலினுக்கு தமிழகம் பாடம் புகட்டும்: அன்புமணி



சென்னை, பிப்.21-

வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க மறுத்து துரோகம் செய்த திமுகவுக்கும், அதன் தலைவர் ஸ்டாலினுக்கும் வரும் தேர்தலில் தமிழக மக்கள் மறக்க முடியாத பாடத்தை புகட்டுவார்கள் என்று பாமக தலைவர் அன்புமணி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், "மராட்டிய மாநிலத்தில் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கான 5 % இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டு விட்டதாக குற்றஞ்சாட்டி சமூக நீதிக் காவலர் வேடம் போட்டிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின். தமிழ்நாட்டில் சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தாமல், வன்னியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 10.50% உள் இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டதற்கு காரணமான ஸ்டாலின் சமூக நீதி பேசுவது சாத்தான்கள் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது.

சச்சார் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட வேண்டும்; அதனடிப்படையில் தேசிய அளவிலும், மாநில அளவிலும் இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்பது தான் பாமகவின் நிலைப்பாடு ஆகும். இன்னும் கேட்டால் சச்சார் குழு பரிந்துரைகள் வருவதற்கு முன்பாகவே தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று தொடர் போராட்டங்களை நடத்தி, அவர்களுக்கு 3.5% இட ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொடுத்த பெருமை பாமகவுக்கு உண்டு.

ஆனால், முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ள 5% இஸ்லாமியர் இட ஒதுக்கீடு மராட்டியத்தில் நடைமுறைக்கு வரவே இல்லை. அங்கும் இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று பா.ம.க. வலியுறுத்துகிறது. ஆனால், இல்லாத இட ஒதுக்கீட்டுக்காக போர் முழக்கம் எழுப்பும் ஸ்டாலின், தமிழ்நாட்டில் வன்னியர் இட ஒதுக்கீட்டுக்கு செய்த துரோகத்தை நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஐந்தாண்டுகளுக்கு முன் அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட வன்னியர் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக தமது மைத்துனரின் ஆதரவில் செயல்பட்டு வரும் தமது சாதி சங்கத்தின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்ற வைத்தார். இது தொடர்பான வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது வாதங்களை வலிமையாக வைக்காமல் வன்னியர் இட ஒதுக்கீடு ரத்து செய்யப்படுவதற்கு காரணமாக இருந்தார்.

அத்தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பாமக செய்த மேல்முறையீட்டை விசாரித்த உச்ச நீதிமன்றம், வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கடந்த 2022ம் ஆண்டு மார்ச் 31ம் தேதி ஆணையிட்டது. அதன்பின் இன்றுடன் 1,423 நாள்களாகியும் இன்று வரை வன்னியர் இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை நிறைவேற்றவில்லை. இந்தியாவின் பல மாநிலங்களில் சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில், தமிழ்நாட்டில் மட்டும் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை திமுக அரசு நடத்தவில்லை.

இப்படியாக எந்த வகையில் பார்த்தாலும் சமூக நீதிக்கு துரோகத்தை மட்டும் தான் ஸ்டாலின் செய்திருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு சமூக நீதி பற்றி பேச எந்த உரிமையும் இல்லை. வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க மறுத்து துரோகம் செய்த திமுகவுக்கும், அதன் தலைவர் ஸ்டாலினும் வரும் தேர்தலில் தமிழக மக்கள் மறக்க முடியாத பாடத்தை புகட்டுவார்கள்" என்று தெரிவித்துள்ளார்.

# வீட்டிலேயே பயிலும் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு முழுத் தேர்ச்சி அறிவிக்க கோரிக்கை

கந்தர்வகோட்டை பிப் 21-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில இணைப் பொதுச் செயலாளர் ரகமதுல்லா வெளியிட்டுள்ள அறிக்கையில் தற்போது பத்தாம் வகுப்பு 12ஆம் வகுப்பு பயிலும் மாற்றுத்திறன் மாணவர்களுக்கான சொல்வதை எழுதுபவர்களாக(scribe) தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து, மீண்டும் பழைய முறைப்படி ஆசிரியர்களை தேர்வு எழுத அனுமதித்த தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் நெஞ்சம் நிறைந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் மாற்றுத்திறனாளி என்ற துறை உருவாக்கப்பட்டு பல்வேறு வகையான உரிமைகளை உரிமையோடு வழங்கினார். கலைஞர் வழியில் ஆட்சி நடத்தும் ஸ்டாலின் அவர்களும் மாற்றுத்திறனாளி துறையின் அமைச்சராக இருந்து பல்வேறு வகையான சலுகைகளை வழங்கி வருகிறார். மாற்றுத்திறன் மாணவர்கள் பள்ளிக் கல்வியில் படிக்கும் மாணவர்களுக்கு இருமடங்கு கல்வி உதவித்தொகை உயர்வு, ஆராய்ச்சி படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ஒரு லட்சம் கல்வி உதவித்தொகை, இந்தியாவிலேயே முதன்முறையாக திராவிட மாடல் ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளை உறுப்பினர்களாக நியமிக்கும் வகையில் சட்டத்தில் உரிய திருத்தங்களைக் கொண்டு வந்து உள்ளாட்சி அமைப்புகளில் இதுவரை 3,632 மாற்றுத்திறனாளிகள் நியமன உறுப்பினர்களாக பொறுப்பேற்றுள்ளனர்.

அத்துடன் தங்களை தாங்களே பராமரித்திட இயலாத மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்கு மாதந்தோறும் 2,000 ரூபாய் பராமரிப்பு தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளின் நலனில் அக்கறை செலுத்தி வரும் அரசு 202122 ஆம் ஆண்டில் 814 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதிலிருந்து 202526 ஆம் நிதியாண்டில் 1,433 கோடி ரூபாயாக உயர்த்தி பல்வேறு சலுகைகளை உரிமையாக தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் வழங்கி வருகிறார். உரிமை வேண்டுகோளாக முற்றிலும் வீட்டிலே தங்கிப் பயிலக்கூடிய பத்தாம் வகுப்பு 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வில் இருந்து விலக்களித்து அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்க வேண்டும் என மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் முதல்வர் ஸ்டாலின் அவர்களை கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்தார்.

# திராவிட மாடல் ஆட்சி புதுச்சேரிக்குத் தேவை

புதுச்சேரி, பிப்.21-

"புதுச்சேரியில் மாநில அந்தஸ்து கேட்டோம். இரட்டை என்ஜின் ஆட்சியில் ஏன் தரவில்லை. மாநில அந்தஸ்து பெற ஸ்டாலினால்தான் முடியும். தமிழக திட்டங்களை கொண்டு வர திராவிட மாடல் ஆட்சி புதுச்சேரியில் தேவை" என்று திமுக கொள்கை பரப்பு செயலர் ஜெகத்ரட்சகன் தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி மாநில திமுக சார்பில் சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள தொகுதி தோறும் செயல்வீரர்கள் கூட்டத்தை தொடங்கியுள்ளனர். காலாப்பட்டு தொகுதியில் இன்று நடந்த செயல்வீரர்கள் கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சிவா தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் திமுக கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத்ரட்சகன் பேசியதாவது: தமிழக ஆட்சியை புதுச்சேரிக்கும் கொண்டு வரவேண்டும்.

புதுச்சேரியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இரட்டை என்ஜின் ஆட்சி என்று சொன்னார்கள். ஆனால் மத்தியிலும், மாநிலத்திலும் உள்ள இரு என்ஜின்களும் கெட்டு போய் விட்டன. பிரதமர் மோடி பொறுப்பேற்ற பிறகு கருப்பு பணத்தை வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து ஒவ்வொருவருக்கும் ரூ. 15 லட்சம் தருவதாகக்கூறினர். ஆனால் 15 பைசாக்கூட தரவில்லை.

புதுச்சேரி என்ஜின் பற்றி சொல்ல வேண்டியதில்லை. நிசப்தமான ஆட்சி நடக்கிறது. மக்களால் தேர்வான முதல்வர், அமைச்சர்கள், எம்எல்ஏக்களுக்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசு பணம் தராவிட்டாலும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 5 ஆயிரம் தமிழக முதல்வர் ஸ்டாலின் தந்துள்ளார். தேர்தல் வரபோகிறது. பிரதமர் மோடி புதுச்சேரி வரபோகிறார். பத்தாயிரம் ரூபாய் தருவதாக சொல்வார்கள். ஆனால் அது பத்தாது. புதுச்சேரிக்கு குடும்பத்துக்கு ரூ. 25 ஆயிரம் தரவேண்டும்.

பிஹாரில் பத்து ஆயிரம் ரூபாய் தந்துள்ளார்கள். தேர்தலுக்காக, வாக்களிக்க லஞ்சம் கொடுத்தனர். ஆனால் தமிழகத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் தந்தார். தேர்தல் வருவதால் மூன்று மாதங்களுக்கு முன்பணமாக தமிழகத்தில் தந்துள்ளார். தமிழர்கள் என்றால் மத்தியில் இருப்போருக்கு பிடிக்காது. பாரதி பாடல்களை மட்டும் பாடுவார்கள்.

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கேட்டோம். இரட்டை என்ஜின் ஆட்சியில் ஏன் தரவில்லை. என்ன வளம் இல்லை ஏன் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து தரவில்லை. மாநில அந்தஸ்து பெற ஸ்டாலினால்தான் முடியும். கருணாநிதி ரத்தம் சிந்திய திராவிட மண்ணான புதுச்சேரியை காக்கும் பொறுப்பு திமுகவுக்கு உண்டு. தமிழக திட்டங்களை கொண்டு வர திராவிட மாடல் ஆட்சி புதுச்சேரிக்குத் தேவை" என்று அவர் கூறினார்.

# இளம் பெண்ணிடம் போட்டோ ஷூட் எடுப்பதாக நகை திருடிய பிசியோ தெரபிஸ்ட் கைது

சென்னை, பிப்.21-

திருவண்ணாமலை மாவட்டம், கருடாழ்வார் நகரில் குடும்பத்துடன் வசிப்பவர் லேப் டெக்னீஷியன் புனிதாஶ்ரீ (22). சினிமாவில் நடிக்கும் ஆசையில் இருந்தார். இவரது வீட்டின் கீழ் தளத்தில் கோயம்புத்தூரைச் சேர்ந்த பிசியோ தெரபிஸ்ட் ஜெகதீஸ் (52) மனைவி, மகளுடன் வாடகைக்கு வசித்து வருகிறார்.

போட்டோ ஷூட் எடுத்து அந்த போட்டோ மற்றும் வீடியோக்களை காண்பித்து சினிமா அல்லது டிவி தொடர்களில் நடிக்க வாய்ப்பு கேட்கலாம் என புனிதாஶ்ரீயிடம் ஜெகதீஸ் தெரிவித்துள்ளார்.

இதை நம்பிய புனிதாஶ்ரீ போட்டோ ஷூட் நடத்த ஒப்புக் கொண்டார். இதை யடுத்து, ஜெகதீஸ் அவரை சென்னைக்கு காரில் அழைத்துச் சென்றார். பின்னர் போட்டோ ஷூட்டுக்கு தேவையான புதிய ஆடைகளை வாங்க ராயப்பேட்டையில் உள்ள பிரபல வணிக வளாகத்துக்கு கூட்டிச் சென்றார்.

அங்கு புனிதாஶ்ரீயை ஆடைகளை வாங்க வைத்து, அந்த ஆடைகளை அவர் அணிந்து பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், அவர் ஏற்கெனவே கைப்பையில் வைத்திருந்த 16 பவுன் தங்க நகைகளை நைசாக திருடிக் கொண்டு ஜெகதீஸ் தப்பினார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு இதை கவனித்த புனிதாஶ்ரீ இது தொடர்பாக அண்ணா சாலை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் படி போலீஸார் வழக்குப் பதிந்து தலைமறைவான ஜெகதீஸ் மற்றும் திருட்டுக்கு உதவியதாக இருந்த 10ம் வகுப்பு படித்துவரும் 16 வயது சிறுமி ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

விசாரணையில் ஜெகதீஸ் மற்றும் இளஞ்சிறுமி ஆகியோர் இதே போல சென்னை சாஸ்திரி நகர், வேளச்சேரி உள்ளிட்ட பல இடங்களில் குடும்பத்துடன் நன்றாக பழகி நம்பிக்கை ஏற்படுத்தி, தங்க நகைகள் மற்றும் செல்போன்களை ஏமாற்றி திருடியுள்ளது தெரியவந்தது.





# தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து மண்டல அலுவலர்களுக்கு பயிற்சி

சென்னை, பிப்.21-

சட்டப்பேரவை தேர்தல் முன்னேற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக தேர்தல் அலுவலர்களுக்கு நேற்று பயிற்சி வழங்கப்பட்டது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி சென்னை மாவட்டத்துக்குட்பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக மண்டல அலுவலர்கள் மற்றும் காவல் துறையினர் உள்ளிட்ட அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு ரிப்பன் மாளிகை வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் கற்பகம் தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்குப்பதிவு மையத்துக்கு கொண்டு செல்லுதல், வாக்குப்பதிவு முடிந்தபின் வாக்கு எண்ணிக்கை மையத்துக்கு கொண்டு செல்லுதல், வாக்குப்பதிவின்போது வாக்குப்பதிவு இயந்திரங்கள் பழுது ஏற்பட்டால் அதற்கு மாற்று இயந்திரங்களை வழங்குதல், இந்த பணிகளின் போது பூர்த்தி செய்ய வேண்டிய படிவங்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மேலும், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் குடிநீர், கழிவறை வசதி, மின் வசதி, மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக சாய்வுதளம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பதை களஆய்வு மேற்கொண்டு, தகவல் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டது.

வாக்குப்பதிவு மையங்களில் செய்யப்பட வேண்டிய முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்தும், சட்டம் ஒழுங்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், பதற்றமான மற்றும் மிகவும் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட உள்ள பாதுகாப்பு வசதிகள் குறித்தும் தொடர்புடைய அலுவலர்கள் களஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

# உலக அரங்கில் முன்னிலை வகிக்க சென்னையின் வளர்ச்சி பல மடங்காக வேண்டும்: ஜெ.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தல்

சென்னை, பிப்.21-

உலக அரங்கில் முன்னிலை வகிக்க, சென்னையின் வளர்ச்சி பல மடங்காக இருக்க வேண்டும். நீடித்த வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்று தமிழக மின் வாரியத்தின் தலைவர் ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



சென்னையின் எதிர்காலத்தை வடிவமைப்பது குறித்து கருத்தரங்கம் சென்னையில் நேற்று நடைபெற்றது. இதில், தமிழக மின்வாரியத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஜெ.ராதாகிருஷ்ணன் பேசியதாவது: சென்னையின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று அதன் வரலாறு.

இந்த நகரம் படிப்படியாகக் கட்டமைக்கப்பட்டது. தமிழகத்தின் வளர்ச்சிக்கு சக்தி அளிக்கும் கலாச்சாரம், தொழில் முனைவு, மீள்தன்மை மற்றும் அசாதாரண திறமைகளைக் கொண்டுள்ளது சென்னை. மருத்துவம், கலாச்சாரத்தின் தலைநகராகவும் விளங்குகிறது.

ஒருங்கிணைப்பு தேவை: நகரில் போக்குவரத்தை வடிவமைக்கவும், பொது சுகாதாரத்தை வலுப்படுத்தவும், பொருளாதார வாய்ப்பை உருவாக்கவும் தொடர்ச்சியாக வழிகாட்ட வேண்டும். உலக அரங்கில் நம்பிக்கையுடன் போட்டியிடுவதன் மூலமாக சென்னை முன்னிலை வகிக்க வேண்டும்.

அதற்கு அரசு, தனியார் நிறுவனங்கள் மற்றும் குடிமக்கள் இடையே ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. நாம் ஒரே நோக்கில் ஒன்றாக நகரும் போது, நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.

சென்னையில் வளர்ச்சி பல மடங்காக இருக்க வேண்டும். மேலும், நீடித்த வளர்ச்சியில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், அதிமுக முன்னாள் அமைச்சர் மாஃபா பாண்டியராஜன், 'சூப்பர் சென்னை' நிர்வாக இயக்குநர் ரஞ்சித் ரத்தோட் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் தலைவர்கள் கலந்துகொண்டு, தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

# கடந்த 5 ஆண்டுகளில் 24 ஆயிரம் போக்குவரத்து ஊழியர் குடும்பத்தினருக்கு ரூ.7,379 கோடி பணப் பலன்: அமைச்சர் சிவசங்கர் தகவல்

சென்னை, பிப்.21-

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிந்த பிறகு, போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் பேசியதாவது: போக்குவரத்து துறையில் ஓய்வுபெற்ற, விருப்ப ஓய்வுபெற்ற மற்றும் பணிக்காலத்தில் மறைந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய காலத்தில் பணப் பயன்களை வழங்க முடியாத சூழல் கரோனா காலத்துக்கு முன்பாகவே இருந்தது.நிதி நெருக்கடியால் அந்த நிலை தொடர்ந்து நீடித்து வந்தது. இந்நிலையில், இந்த ஆட்சியில் முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து ஒவ்வொரு கட்டமாகபணப் பலன்களை வழங்கி வந்தார்.அதன் உச்சகட்டமாக கடந்த 2024 ஆகஸ்ட் முதல் 2026 மார்ச் வரையிலான காலகட்டத்தில் மறைந்த, ஓய்வு பெற்ற, ஓய்வு பெற உள்ள 6,867 தொழிலாளர்களுக்கு தற்போது ரூ.2,446 கோடி வழங்கியுள்ளார்.

முன்னதாக, கடந்த 202122ம் ஆண்டில் 1,241 பேருக்கு ரூ.248 கோடி, 202223ம் ஆண்டில் 5,267 பேருக்கு ரூ.1,339 கோடி, 202324ம் ஆண்டில் 210 பேருக்கு ரூ.32 கோடி, 202425ம் ஆண்டில் 4,740 பேருக்கு ரூ.1,278 கோடி பணப் பலன்களை வழங்கி இருந்தார்.

கடந்த 5 ஆண்டுகளில் மொத்தம் 24,200 தொழிலாளர்களுக்கு ரூ.7,379 கோடி பணப் பலன்களை முதல்வர் வழங்கியுள்ளார். ஓர் ஆட்சிக் காலத்தில் ஓர் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை முடிப்பதே சிரமமாக இருக்கும் சூழலில், இந்த ஆட்சியில் 2 பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

முதல்வரின் நடவடிக்கைகளால், போக்குவரத்து தொழிலாளர்கள் மிகுந்த மகிழ்ச்சி, நம்பிக்கையுடன் பணியாற்றி வருகின்றனர். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

# வருமானத்துக்கு அதிகமாக 372% சொத்து சேர்த்த பெண் காவல் ஆய்வாளர்: லஞ்ச ஒழிப்பு போலீஸார் வழக்கு

சென்னை, பிப்.21-

ராஜலட்சுமி என்பவர் சென்னை காவல் துறை பாலியல் தடுப்புப் பிரிவில்(1) ஆய்வாளராக பணிபுரிகிறார். இவர் திருமங்கலம், வெல்கம் காலனியில் குடும்பத்துடன் வசிக்கிறார்.



இவர் பணியின்போது தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி முறைகேடாக அதிகளவில் பணம் சம்பாதித்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதை அடிப்படையாக வைத்து கடந்த 13ம் தேதி இவரது வீட்டில் லஞ்ச ஒழிப்புப் பிரிவு போலீஸார் சோதனை நடத்தினர்.

முடிவில் பல்வேறு சொத்துகள் தொடர்புடைய முக்கிய ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு போலீஸார் பறிமுதல் செய்து கையோடு எடுத்துச் சென்றனர். இதன் தொடர்ச்சியாக வருமானத்தை விட 372% அதிக சொத்து சேர்த்ததாக ஆய்வாளர் ராஜலட்சுமி மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அதில், "குற்றச்சாட்டுக்கு உள்ளான ஆய்வாளர் ராஜலட்சுமி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, பொருளாதார குற்றப்பிரிவு, பாலியல் தடுப்புப் பிரிவு, போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போன்ற முக்கியமான இடங்களில் பணிபுரிந்தபோது தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து, 01.06.2017 முதல் 30.06.2025 வரையிலான காலகட்டத்தில், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வாங்கி குவித்திருந்துள்ளார்.

1999ல் நேரடி எஸ்ஐயாக பணியில் சேர்ந்த ராஜலட்சுமி, ஆய்வாளராக பதவி உயர்வு பெற்ற பிறகு, 2010 முதல் சென்னை நகருக்குள் மட்டுமே முக்கியமான இடங்களில் பணிபுரிந்துள்ளார். எனவே அவரது சட்ட விரோத வருவாயைக் கணக்கிட 01.06.2017 முதல் 30.06.2025 வரையிலான காலம் கணக்கிடப்பட்டது.

இந்த காலக்கட்டத்தில் அவர் வருமானத்தை விட ஊழல் மற்றும் சட்டவிரோத வழிகளில் ரூ.5.42 கோடிக்கு சொத்துகளை தனது பெயரிலும், குடும்ப உறுப்பினர்களின் பெயரிலும் வாங்கியுள்ளார்.

அதாவது வருமானத்தை விட 372% அதிகளவில் சொத்து சேர்த்துள்ளார். இதையடுத்து, அவர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது

# 2025-26ம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பேரவையில் தாக்கல்

சென்னை, பிப்,21-

2025-26 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை முன்வைத்து அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டமன்றத்தில் பதிலளித்தார்.

சட்டசப்பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்திற்கு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை ஆற்றினார். குறிப்பாக, 2025- 26 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை முன்வைத்து அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டமன்றத்தில் பதிலளித்தார். அப்போது அவர் பேசும்போது, "2025-2026 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கையினை இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றேன்.



இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 43,08,299 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில், 35,56,266 கோடி ரூபாய் வருவாய் கணக்கிலும், 4,548.71 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும், 297162 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாளன்று 2025 26 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், புதுப்பணிகள் மற்றும் துணைப்பணிகள் குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவது இத்துணை மதிப்பீடுகளின் முக்கிய நோக்கமாகும்.

துணை மதிப்பீடுகளில் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் சில முக்கிய இனங்கள் பின்வருமாறு:

மானியக் கோரிக்கை எண். 13: உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)", அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் 2026 ஆம் ஆண்டின் பொங்கல் பரிசு தொகுப்புடன் 3,000 ரூபாய் வழங்குவதற்காக ரூ.6,95,705 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

மானியக் கோரிக்கை எண்.53: "சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை" 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பயனாளிகளுக்கு தலா 5,000 ரூபாய் வழங்குவதற்காக கூடுதல் நிதியாக 3,913.32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கை எண் 16 'நிதித் துறை 202526 ஆம் ஆண்டில் உத்திரவாத மீட்பு நிதிக்கு மாற்றப்படுவதற்காக ரூ.3,08680 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண்.48: "போக்குவரத்துத் துறை", நடப்பு நிதியாண்டில் அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து இயற்கை எய்திய, ஓய்வுபெற்ற மற்றும் தன்விருப்ப ஓய்வுபெற்ற ஊழியர்களின் ஜூலை மாதம் 2023 முதல் மார்ச் மாதம் 2026 ஆம் ஆண்டு வரையிலான ஓய்வு காலப் பணப்பலன்களை வழங்குவதற்காக மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு வட்டியில்லா வழிவகை முன்பணம் வழங்குவதற்கு 3,285.03 கோடி ரூபாய் அரசு அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் 161154 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் மறுநிதியொதுக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

பேரவைத் தலைவர், 2025 2026 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகின்றேன்.




■ தென்காசி மாவட்டம், புளியங்குடி பேருந்து நிலைய வளாகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற, குழந்தை திருமண தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பெண் கல்வி, பெண்கள் முன்னேற்றம், குழந்தை திருமண தடுப்புச் சட்டம், பெண்கள் மற்றும் குழந்தைகள் உதவி எண்கள்1098, 181 குறித்த, மாவட்ட அளவிலான ஸிமீமீறீஉ போட்டியினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர்.இ.ஆ.ப. துவக்கி வைத்தார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணிஸ்ரீ குமார் புளியங்குடி நகராட்சி ஆணையாளர் நாகராஜன் ஆகியோர் உள்ளனர்.



■ சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சேலம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிருந்தா தேவி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழி மொழியினை ஏற்றார். இந்த நிகழ்ச்சியில் ஆட்சித் தலைவர் அலுவல ஊழியர்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.



## அலங்காநல்லூரில் தவெக மற்றும் கேடிபி நண்பர்கள் சார்பில் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி

அலங்காநல்லூர்,பிப்.21-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே சின்னஊர்சேரி கிராமத்தில் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றிக் கழகம் மற்றும் கே.டி.பி நண்பர்கள் சார்பாக வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடைபெற்றது. இந்த போட்டியை மதுரை மாநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் விஜய் அன்பன் கல்லானை தலைமை தாங்கி தொடங்கி வைத்தார் சோழவந்தான் மாவட்ட செயலாளர் விஷால் கிருஷ்ணா, இணை செயலாளர் நட்ராஜ், மாவட்ட நிர்வாகி விக்கினேஸ், வழக்கறிஞர் விக்கினேஸ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் 16 ஜல்லிக்கட்டு காளைகள் தனித்தனியே தலா 20 நிமிடம் வீதம் களத்தில் நின்று விளையாடியது. அதனை அடக்க 10 பேர் கொண்ட வீரர்கள் களமிறங்கினர். சிறப்பாக நின்று விளையாடி வெற்றி பெற்ற காளைகளுக்கும், காளையை அடக்கிய வீரர்கள் குழுவிற்கும் ரொக்க பணம், கேடயம் மற்றும் கட்டில், அண்டா உள்ளிட்ட பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது. இதில் ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ், இணைச் செயலாளர் ராமநாதன், மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, இணைச் செயலாளர் முத்து, அலங்கை நகரசெயலாளர் தளபதிரஞ்சித், பாலமேடு நகர செயலாளர் புகழ்,

நிர்வாகிகள் அய்யங்காளை, வெங்கடேஸ் அஜேய் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் தனசேகரன், கார்த்திக், கலந்து கொண்டனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை அலங்காநல்லூர் போலீசார் செய்தனர்.



## மக்கள் வரவேற்பில் மின்னிய கிருபாகரன் – மல்லையாபுரத்தில் உற்சாக விழா

திண்டுக்கல், பிப்.21-

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியைச் சேர்ந்த எஸ் கிருபாகரன் தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் நிறுவனராக உள்ளார். இவரது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அக்கரைப்பட்டி ஊராட்சி, மல்லையாபுரத்திற்கு கிருபாகரன் வந்தபோது கிராம மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதன் பின்னர் காளியம்மன் கோவில் திடலில் பொதுமக்கள் முன்னிலையில் பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடினார்.

அப்போது அக்கரைப்பட்டி த.வெ.க. கட்சியைச் சேர்ந்த ஊராட்சி செயலாளர் எஸ்.பார்த்திபன் மற்றும் அதிமுகவைச் சேர்ந்த பாரதராஜா உட்பட 25க்கும் மேற்பட்டோர் தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்க நிறுவனர் கிருபாகரன் முன்னிலையில் இணைந்தனர். அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்த கிருபாகரன் ஜாதி, மதத்திற்கு அப்பாற்பட்டு அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படும் தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தில் மாற்று கட்சியினர் இணைந்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

நிகழ்ச்சியில் மகளிர் அணியினைச் சேர்ந்த தனம், விஜயலெட்சுமி, அஜித்தா மற்றும் தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் நிர்வாகிகள் அருண்குமார், லோகேஷ்வரன், மல்லையாபுரம் சதீஸ்குமார், தினகரன், சிலம்பரசன், நடராஜ், பிரவீண், சக்தி, குருபிரசாத், முருகபிரபு உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கிராமங்கள் தோறும் தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தில் மாற்றுக் கட்சியினரை இணைக்க வரும் மார்ச் மாதம் 1ம் தேதி முதல் தமிழக முழுவதும் சுற்றுப்பயணம் செய்யப் போவதாக நிறுவனர் கிருபாகரன் நிருபர்கள் மத்தியில் தெரிவித்தார்.

# அலங்காநல்லூரில் பாரதிய ஜனதா கட்சியின் பொதுக் கூட்டம் நடைபெற்றது




அலங்காநல்லூர்.
பிப்.21-

மதுரை கிழக்கு மாவட்டம் சோழவந்தான் தொகுதி அலங்காநல்லூர் வாடிவாசல் அருகில் பாஜகவின் பட்ஜெட் விளக்க கூட்டம் மாவட்ட தலைவர் ராஜசிம்மன், தலைமை தாங்கினார் மாவட்ட துணை தலைவர் கோவிந்தமூர்த்தி முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தமிழ் வளர்ச்சி பிரிவு மாநில அமைப்பாளர்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பழகன், மாநில பொதுச் செயலாளர் நதியாஸ்ரீவாசன், தேசிய பொதுக்குழு உறுப்பினர் பழனிவேல்சாமி, மற்றும் மாவட்ட பொதுச்செயலாளர் அலங்கை பொன்குமார், மற்றும் மூவேந்திரன, பொருளாளர் தங்கவேல்சாமி, மேலும் மாநில, மாவட்ட, ஒன்றிய அணி பிரிவு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் எடுத்துக் கூறப்பட்டது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு தொடர்ந்து மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களையும் சலுகைகளையும் இந்தியா முழுவதும் செய்து வருவதாக நிர்வாகிகள் பேசினார் தொடர்ந்து பேசியவர்கள் மத்திய அரசு வஞ்சிப்பதாக தமிழக அரசு கூறுகிறது நிதி எவ்வளவு வாங்கினாலும் அதனை மறைத்து விட்டு நிதி தருவது இல்லை என்று கூறுவது திமுக அரசு தொடர்ந்து பொய் மட்டும் சொல்லிக் கொண்டே தான் இருக்கிறது தனக்குத்தானே விளம்பரத்தை தேடிக் கொள்ளும் இந்த திராவிட மாடல் அரசு விரைவில் அகற்றப்படும் என தெரிவித்தனர்.இதில் மண்டல தலைவர்கள் இருளப்பன், முனீஸ்வரி, கூட்டணி கட்சியான அதிமுக சார்பில் நகர செயலாளர் அழகுராஜ் அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர் சுந்தர்ராஜன், நகரப் பொருளாளர் சுந்தரராகவன், இளைஞர்னிநிர்வாகி குமரேசன், அம்மா மக்கள் முன்னேற்ற கழக ஒன்றிய செயலாளர் சம்பளம் ரகு, செந்தில்குமார், பாட்டாளி மக்கள் கட்சியின் ஒன்றிய தலைவர் விஜயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




■ ஈரோடு மாவட்ட ஆட்சியர் சு.கந்தசாமி, ஈரோடு மாநகராட்சி சோலார் பேருந்து நிறுத்தம் பகுதியில், ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு திட்டம் 2026 27 இன் கீழ், ஈரோடு கரூர் சாலையை இரு வழி தடத்திலிருந்து, நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல், சிறுபாலம் அகலப்படுத்துதல், சாலை சந்திப்பு மேம்பாடு மற்றும் விரிவாக்க பணிகளை துவக்கி வைத்தார்.




## கணிதம் காட்டும் தொழில் வாய்ப்புகள் – மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் 2026 விழா

திசையன்விளை,
பிப்.21-

திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் கணிதத்துறை சார்பில் கணித மன்ற விழா 2ரி26 சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் து.லில்லி தலைமை வகித்து தலைமையுரை வழங்கினார். கணிதத்துறைத் தலைவர்.சி.மகேந்திரன் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை வழங்கினார். கணிதத்துறை உதவிப் பேராசிரியர். பி.சுப்பிரமணியன் சிறப்பு விருந்தினர் பற்றிய அறிமுக உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராக நாகம்பட்டி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியின் கணிதத்துறை உதவிப் பேராசிரியர். முனைவர் சு.ரவி நாராயணன் "கணிதத்தால் வரும் பணிவாய்ப்புகள்" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். அதன் பிறகு மாணவ, மாணவிகளுக்கு கணிதம் பற்றிய வினாடிவினா, ஓவியப்போட்டி, நெருப்பில்லாச் சமையல், சைகை மொழியில் கணிதம் கண்டறிதல் எனும் போட்டிகளை நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்பட்டது.

விழாவின் இறுதியில் கணிதத்துறை உதவிப் பேராசிரியர் மி. ஜோசப் நன்றியுரை கூறினார். மேலும் இவ்விழாவில் கணிதத்துறை உதவிப் பேராசிரியை சி.அகிலா மற்றும் கணிதத்துறை மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் தமிழ் துறை பேராசிரியர் பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினரை பாராட்டி சிறப்புரை வழங்கினார் இந்நிகழ்ச்சிக்கு அனைத்து துறை பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கணிதத்துறை தலைவர் மற்றும் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் செய்திருந்தனர்.



■ மதுரை மாவட்டம், பாலமந்திரம் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் தலைமையில் திலீப்பாபு தனிநபர் பங்களிப்பின் கீழ் 1.3 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கட்டிப்பணிகள் மேற்கொள்ளும் வகையில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. உடன் முதன்மை கல்வி அலுவலர் தயாளன் உள்ளார்.



■ உலக தாய்மொழி தினம் (21.02.2026) முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நராவனே இ.ஆ.ப., தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்துத்துறை அலுவலர்களும் உலக தாய்மொழி தின உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க. கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. மகாராஜ், துணை இயக்குநர் (தமிழ் வளர்ச்சித்துறை) சுந்தர் மற்றும் அனைத்துத்துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



■ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நராவனே தலைமையில், மாவட்டத்திற்கு வருகை தரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் வருகையை முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (திருப்பூர் தெற்கு) ரங்கராஜ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் பதீராஜா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் (பொறுப்பு) லாவண்யா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000